விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 363 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 02 புதன்கிழமை (17.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

18, 19ஆம் திகதிகளில்

## பாராளுமன்றம் கூடுகின்றது

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களிலும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர்

15ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவு புதைகுழி தொடர்பான விசாரணை அறிக்கையை தட்டச்சு பிரதியாக வழங்குக

### ஊர்காவற்றுறை நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு

(ஊர்காவற்றுறை)

மண்டைதீவு புதைகுழி தொடர்பிலான விசாரணை அறிக்கையை கையெழுத்துப் பிரதியாக வழங்காது, தட்டச்சு பிரதியாக வழங்குமாறு பொலிஸாருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாட்களில் இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது 80இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல்

04ஆம் பக்கம் பார்க்க

சேதமடைந்த உட்கட்டமைப்பைச் சீர்செய்ய

# ரூ.200 பில்லியனுக்கு அதிக நிதி தேவை

(கொழும்பு)

டித்வா புயல் காரணமாக சேதமடைந்துள்ள உட்கட்டமைப்புக்களைச் சீர்செய்ய 200 பில்லியனுக்கும் அதிகமான நிதி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

போலிக் கடவுச்சீட்டுடன்

## கிளிநொச்சி இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

கிளிநொச்சி முழங்காவிலைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவர் போலிக் கடவுச்சீட்டுடன் கட்டுநாயக்கவில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் தாவடியில்

## மாடியிலிருந்து வீழ்ந்த தொழிலாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

தாவடிப் பகுதியில் மேல் மாடியில் மேசன் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இதில் அச்செழு

15ஆம் பக்கம் பார்க்க

## வட மாகாண ஆசிரியர்களின் இடமாற்றங்கள் இரத்து

### வழக்கு மீளப் பெறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுவதாக கல்வி திணைக்களம் அறிவித்ததையடுத்து, நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு மீளப்பெறப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வித்

15ஆம் பக்கம் பார்க்க

## சமஷ்டித் தீர்வு தொடர்பாக தமிழகத் தலைவர்களின் ஆதரவைப் பெற

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான குழு இவ்வாரம் சென்னை பயணம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக, தமிழர் தேசம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சமஷ்டித் தீர்வினை வலியுறுத்தியும், அதற்கு தமிழக அரசியல் தலைவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தமிழ்த் தேசிய மக்கள்

04ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணப் பொதிகளுடன் மற்றுமொரு இந்தியக் கப்பல்



15ஆம் பக்கம் பார்க்க

மாவிட்டபுரத்தில்

## மூச்சுவிட சிரமப்பட்ட யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் மூச்சுவிட சிரமப்பட்ட இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

திருகோணமலை விகாரை விவகாரம்

## சமரசமான தீர்வுக்கு இரு தரப்பும் இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை விகாரை விவகாரத்தை சமரசமாகத் தீர்க்க இரு தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளன.

திருகோணமலை ஸ்ரீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரைக்கு உரித்தானது எனக் கூறப்படும் கட்டுமானத்தை இடித்து அகற்றுமாறு கடலோரப் பாதுகாப்பு திணைக்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நிலைத்திருக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30-07-1935

மறைவு
28-12-2024

அமரர்

## லயன் மூத்ததம்பி கனகரத்தினம் (B.com)


(ஓய்வுபெற்ற பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் - மாவட்டச் செயலகம், மன்னார்)

அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசமிகு தந்தையாய்
கடமையில் கண்டிப்பாய் இருந்தே
நல்வழி காட்டி எம்மை
நற்பிரஜைகளாக வாழச் செய்து
எமைப்பிரிந்து ஆண்டு ஒன்றாகுதப்பா...

"சரஸ்வதி வாசா"
பிராமனோடை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(6192) குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
21.12.1954

மறைவு
16.12.2025

எமது பிரதேச செயலகத்தில் வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி **யுஸ்ரின் குறுஸ் அமலயூலியட்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்;

## செபஸ்தியாம்பிள்ளை தோமஸ்

(அல்வாய் வடமேற்கு, திக்கம்)

அவர்கள் 16.12.2025 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
(C-4588) **பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி தமிழ்ப் பாட ஆசிரியை **செல்வி ஜெயந்தி சக்திவேல்** அவர்களின் அன்புத் தாயார்

## சக்திவேல் அன்னலட்சுமி

அவர்கள் 16.12.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
**யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்**

(C-4593)

# மரண அறிவித்தல்

## நாகரத்தினம் செல்வரத்தினம்

(ஓய்வு பெற்ற படவரைஞர்)



உப்புமடம், கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் 60 4/5, மேபீல்ட் வீதி, கொட்டஹேன, கொழும்பை வசிப்பிடமாகவும் கௌரிவாசம், இணுவில் மேற்கைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற படவரைஞரான நாகரத்தினம் செல்வரத்தினம் அவர்கள் கடந்த (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகரத்தினம் - தங்கரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வரும் செல்வகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சதீஸ்குமார் (கனடா), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), கிருசாந்தி (இங்கிலாந்து), துஸ்யந்தி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், தெல்லிப்பழை), சுபத்திரா (கனடா), வானதி (பிரான்ஸ்), லோகேந்திரா மற்றும் சிவரஞ்சன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, காலஞ்சென்ற புவனேஸ்வரி, சுந்தரலிங்கம் (இங்கிலாந்து), மனோன்மணி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), சறோசா (கனடா), இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இலக்கியா (வங்கி அலுவலர்), ஆதுளன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), கனடாவில் வசிக்கும் தனுசன், தயூபன், பிரான்சில் வசிக்கும் சாகித்தியன், சங்கீதன், தமிழினி, இங்கிலாந்தில் வசிக்கும் சிந்தியா, லக்ஸியா, கீரன், யுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2025) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கௌரிவாசம், செட்டிவளவு வீதி, இணுவில் மேற்கு, இணுவிலில் அமைந்துள்ள அன்னாரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(6199)

# மரண அறிவித்தல்



## சக்திவேல் அன்னலட்சுமி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சக்திவேல் அன்னலட்சுமி அவர்கள் நேற்று (16.12.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - வேதநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் சக்திவேல் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், வசந்தி, பரணிகரன் மற்றும் ஜெயந்தி (ஆசிரியை - யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் தாயாரும் சசிகலா அவர்களின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், சிவசம்பு, பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, அன்னலெட்சுமி, தெட்சணாமூர்த்தி, சிதம்பரநாதன் மற்றும் காங்கேசபிள்ளை, காலஞ்சென்ற பரராஜசிங்கம், கதிர்மலர் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் புஸ்பவதி (பவளம்), புவனேஸ்வரி, தியாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி(சந்திரா), ஜெயந்தி, காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் சகோதரியும் தீபிகா (கனடா), கீர்த்தனா (அமெரிக்கா), விவேக்கா (ஆயுள்வேத வைத்தியர்), கிருசாந் (கனடா), சாயீசன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கொற்றவை (அமெரிக்கா) அவரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.03,
[illegible]ங்கை,
[illegible] வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்
077 787 1343

(1806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் பணம் நாட்டின் அபிவிருத்திக்கே

# அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையினால்

# வரி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையினால் வரி வருமானம் அதிகரித்துள்ளது என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

இலங்கை உள்நாட்டு இறை வரித் திணைக்களம் நிர்ண யிக்கப்பட்ட வருவாய் இலக்கு களை மீறி 50 பில்லியன் ரூபா அளவிலான கூடுதல் வரி வருவாயை ஈட்டியுள்ள தாகக் குறிப்பிட்டுள்ளார்.

விரயங்களை வரையறுத்த காரணத்தினால் வரி செலுத்து பவர்களின் நம்பிக்கையை அதிகரிக்க முடிந்ததாகவும், அதுவே உள்நாட்டு வருவாய் துறைக்கு இலக்குகளைத் தாண்டி வருவாய் ஈட்ட உதவி யதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

மேலும், வரி செலுத்தும் மக்களின் பணம் நாட்டின் அபிவிருத்திக்கே பயன்படுத் தப்படும் அதில் எந்த முறை கேடும் இருக்காது என்ற அர சின் உறுதி, வரி வருவாய் அதிகரிக்க முக்கிய காரண மாக அமைந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு வருவாய் துறை யில் புதிதாக இணையும் உதவி ஆணையர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங் கும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரதி அமைச்சர் இக்கருத்துகளை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பு வரி வருமானம் சரியான முறையில் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப் படவில்லை என்ற அனுபவம் கொண்ட மக்களின் மனப் பாங்கை மாற்றுவது எளி தல்ல.

ஆனால், அந்த நம் பிக்கையை மீண்டும் உருவாக் கும் முன்மாதிரியை அரசு தற் போது வரிசெலுத்தும் மக்களுக்கு வழங்கி வருவதாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஒப்பாக நாட்டின் வரி வருவாய் அதி கரிப்பது ஊழல் குறைவதற்கும் வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கனேடிய உயர்ஸ்தானிகர் - பிரதமர் சந்திப்பு

(கொழும்பு)

புதிதாக நியமனம் பெற் றுள்ள இலங்கைக்கான கனே டிய உயர்ஸ்தானிகர் இசபெல் கெத்தரின் மார்ட்டின், பிரதமர் ஹரிணி அமரசூரிய அவர் களை நேற்று முன்தினம்அலரி மாளிகையில் வைத்து சந் தித்தார்.



இதன்போது 'டித்வா' புய லினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து கனடா நாட்டின் அனு தாபங்களைத் தெரிவித்த உயர் ஸ்தானிகர், நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவ தற்கு, இலங்கைக்கு மேலும் ஆதரவை வழங்கக் கனடா தயாராக இருப்பதாக உறுதிப் படுத்தினார். மீட்பு மற்றும் உடனடி நிவாரண நடவடிக் கைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, அனர்த்தத்திற்குப் பின்னரான இரண்டாம் கட் டத்தை இலங்கை தற்போது அடைந்துள்ளது என்பதைக் குறிப்பிட்ட பிரதமர், கனடா உள்ளிட்ட சர்வதேச சமூகம் வழங்கிய உதவிக்குத் தனது நன்றியைத் தெரிவித்தார். (நி)

## தவணைப் பரீட்சை இல்லை கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

2025 ஆம் கல்வியாண் டின் மூன்றாம் தவணைக் கான 6 முதல் 10 ஆம் தரங் களுக்கான தவணைப் பரீட்சை நடத்தப்படாது என்று மீண் டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னர் வழங்கப்பட்ட வழிமுறை களை செயற்படுத்துமாறு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு தொடர்புடைய அதிகாரிகளுக்கு, குறிப்பாக அனைத்து அதிபர் களுக்கும் ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த் தங்கள் காரணமாக இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களை அடுத்த தரங்களுக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெரி விக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 11 ஆம் தர மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சையை நடத்த முடியும் என தெரிவிக்கப்பட் டுள்ளது. (நி)

## அனர்த்தத்தால் அழிவடைந்த

## 1 மில்லியனுக்கும் அதிகமான பிறப்பு, திருமண பதிவு பத்திரங்கள்

(கொழும்பு)

டித்வா புயலால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிறப்பு மற்றும் திரு மணப் பதிவுச் சான்றிதழ்கள் அழிக்கப்பட்டுள்ளதாகப் பதி வாளர் நாயகத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய பிறப்பு மற்றும் திரு மணச் சான்றிதழ்களை வழங் குவதற்காக நடமாடும் சேவைத் திட்டங்கள் ஏற்கனவே தொடங் கப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் திருமதி. சசிதேவி ஜல்தீபன் தெரிவித்துள்ளார்.

அண்மைய பேரிடரால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 2.2 மில்லியன் மக்களில், பாதிக்கும் மேற்பட்டோர் இந்த முக்கிய மான ஆவணங்களை இழந் துள்ளதாக அத்திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இந்த முயற்சி யின் கீழ், பேரிடரால் பாதிக்கப் பட்ட 22 மாவட்டங்களில் பதிவுச் சான்றிதழ்கள் இலவச மாகவும், ஒரு நாள் துரித சேவை மூலமாகவும் வழங்கப்படு கின்றன.

அத்துடன், மண்சரிவு மற் றும் வெள்ளத்தில் உயிரிழந்த அல்லது காணாமல் போன நபர்களுக்கான மரணச் சான்றி தழ்களை வழங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அரசின் க்ளின் ஶ்ரீலங்கா திட்டத்தின் கீழ் சில பகுதிகளில் நடமாடும் சேவைத் திட்டமும் செயற்படுத் தப்பட்டு வருவதாகவும் தெரிவித் தார். பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ் கள் இல்லாதவர்கள் குறித்த தரவுகளை மாவட்ட துணைப் பதிவாளர்கள் தற் போது சேகரித்து வருகின்றனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் இந்தப் பதிவேடுகளை வழங்கும் பணியை நிறைவு செய்யத் திணைக்களம் இலக்கு நிர்ண யித்துள்ளதாகப் பதிவாளர் நாய கம் மேலும் தெரிவித்தார். (நி)

## அனர்த்தத்தால் பிரிந்த குழந்தையை தாயிடம் ஒப்படைத்த படையினர்



(கண்டி)

கண்டியில் அனர்த்தம் கார ணமாக வீடொன்றில் சிக்கியி ருந்த குழந்தை ஒன்று சிறப்பு படையினரால் மீட்கப்பட்டு பெற் றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

மீமுர பகுதியில் வீட்டில் சிக்கியிருந்த மூன்று மாதக் குழந்தையை மீட்க இராணு வத்தின் 2ஆவது கமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த 8 பேர் கொண்ட குழு களத்தில் இறங் கியது.

கடந்த 3 ஆம் திகதி கரம்ப கெட்டிய கிராமத்தில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவத்தினர், வீட்டில் 3 மாதக் குழந்தையுடன் பாட்டி தனியாக இருப்பதைக் கண்ட னர். அவரது தாயார் வேலைக் குச் சென்றிருந்த நிலையில் அனர்த்தம் காரணமாக வேறு பகுதியில் சிக்கியிருந்தார்.

இந்நிலையில் கடும் மழை யிலும் தாய்ப்பால் இல்லாமல் பலவீனமாக இருந்த குழந்தை யையும் அவரது பாட்டியையும் இராணுவத்தினர் காப்பாற்றி யுள்ளனர். மீட்கப்பட்ட இரு வரும் விமானம் மூலம் இரா ணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தாய் வேறொரு இடத்தில் சிக்கியிருந்த நிலையில் அவரை கண்டுபிடிக்கும் வரை யில், குழந்தை இராணுவ முகாமில் பாதுகாப்பாக பாட்டி யுடன் தங்க வைக்கப்பட்டிருந் தது. இந்நிலையில் தாய் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் குழந்தை அவரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (நி)

## இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் டி.எஸ்.டி சில்வா காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் டி.எஸ். டி சில்வா லண்டனில் தனது 83 ஆவது வயதில் காலமானார்.

இவர் இலங்கையின் பிர பல சுழற்பந்துவீச்சாளரா வார்.

இலங்கை டெஸ்ட் அந்த ஸ்து பெற்ற பின்னர், 1982 ஆம் ஆண்டு விளையாடிய முதலாவது டெஸ்ட் கிரிக் கெட் போட்டியில் இவர் பங் கேற்றார்.

இவர் கிரிக்கெட் [illegible] யாட்டிலிருந்து [illegible] பின்னர், ஶ்ரீலங்கா கிரிக் கெட்டின் தலைவராகவும் பதவி வகித்து, நாட்டின் கிரிக்கெட் நிர்வாகத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்கினார்.

இலங்கை கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான ஒருவராகக் கருதப்பட்ட டி.எஸ். டி சில்வாவின் மறைவுக்கு பலரும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டைதீவு...

ஆக்கப்பட்டவர்களின் 45 இற்கும் அதிகமான சடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் இருப்பதுடன் அதற்கான வாழும் சாட்சியங்கள் உறுதியாகவும் இருக்கின்றன. அதேபோன்று அதற்கு அயலிலுள்ள பாடசாலைக் கிணறு ஒன்றுக்குள்ளும் சடலங்கள் இருக்கின்றன.

எனவே குறித்த கிணற்றை அகழ்ந்து சடலங்களை வெளிக் கொணர்ந்து உண்மைகள் வெளி உலகுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த செப்ரெம்பர் மாதம் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரிலடா என்ற தாய் ஒருவரே ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் ஊர்காவத்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து சான்று ஆதாரங்களுடன் விசாரணை அறிக்கையில் மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதன் அடிப்படையில் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, பொலிஸாரினால் அப்பகுதி மக்கள், பாதிக்கப்பட்டவர்கள், கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் கிணறுகள் தொடர்பிலான விசாரணை உள்ளடங்கலான விசாரணை அறிக்கையினை கையெழுத்துப் பிரதியாக மன்றில் பொலிஸார் சமர்ப்பித்தனர்.

அதனையடுத்து விசாரணை அறிக்கையைத் தட்டச்சுப் பிரதியாக இன்று புதன்கிழமை மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். *(ம-7,33)*

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை குத்தகைக்குவழங்குவதற்கான இரண்டாவது மீள் கேள்வி அறிவித்தல் - 2026

**(2026.01.01 – 2026.12.31 வரையிலான காலப்பகுதிக்குரியது)**

01.கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2025.12.17 இல் இருந்து 2025.12.23 ஆம் திகதி 3.00 மணி வரை

02.கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2025.12.24 காலை 10.00 மணி வரை

03.கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2025.12.24 காலை 10.00 மணி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 2025.09.09, 2025.11.11 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இரண்டாவது மீள் கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் விபரம் குறிப்பிட்டு, "தலைவர், கேள்விச்சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி" என்ற முகவரியிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்டு, கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியை ஏக காலத்திலேயே "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரி அனுப்புதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் எவராயினும் ஒருவர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணத்தை கொண்டு வருவதுடன், அவ் ஆவணத்தின் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

06. உரிய நிதி ஆண்டின் கேள்வித்தொகையின் சம மாத தவணைக்கட்டணத்தில் 1/3 பகுதியை முற்பணமாக ஏற்புக் கடிதத்தில் குறிக்கப்படும் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னரான மாதாந்தங்களுக்குரிய சமதவணைக் கட்டணங்களை அடுத்துவரும் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும், காலதாமதமாக தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படின் 10% தண்டத்துடன் செலுத்த வேண்டும். முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களின் தவணைக்கட்டணங்களாக கருதி கணக்கு சீர் செய்யப்படும்.

07. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

| தொ.இல | விபரம் | 2026 ஆம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த மீள் கேள்வி தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 51,250.00 | 512.50 | 1,000.00 | 1,000.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 2 | உடுப்பிட்டி சந்தை | 2,470,500.00 | 24,705.00 | 1,000.00 | |
| 3 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 207,000.00 | 2,070.00 | 1,000.00 | 1,000.00 |
| 4 | நவிண்டில் சந்தை | 32,000.00 | 320.00 | 1,000.00 | |
| 5 | நவிண்டில் சந்தை கோழியிறைச்சிக்கடை | 70500.00 | 705.00 | 1,000.00 | 1,000.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 6 | கோயிற்சந்தை கோழியிறைச்சிக்கடை | 379,500.00 | 3,795.00 | 1,000.00 | 1,000.00 |
| 7 | கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 360,000.00 | 3,600.00 | 1,000.00 | 1,000.00 |
| 8 | கொட்டடி சந்தை | 498,500.00 | 4,985.00 | 1,000.00 | |
| 9 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 54,000.00 | 540.00 | 1,000.00 | 1,000.00 |

**தொடர்புக்கான தொலைபேசி இல:**

தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கட்டைவேலி உப அலுவலகம் : 021 226 1244

கடமை நேரம் மு.ப. 8.30 - பி.ப. 16.15 வரை

**குமாரசாமி சுரேந்திரன்,**
**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(C-4590) 17.12.2025

## சமஷ்டித் தீர்வு...

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினர் இவ்வாரம் சென்னை செல்லவுள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக "ஏக்கியராஜ்ய" (ஒற்றையாட்சி) அரசியல் யாப்பைத் திணிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி தமிழ் மக்களுக்கான உண்மையான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்டுவர வேண்டும்.

இதற்குத் தேவையான அழுத்தங்களை சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும். குறிப்பாக பிராந்திய வல்லரசான இந்திய அரசாங்கம் இலங்கை மீது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறான சூழலை உருவாக்குவதற்குத் தமிழக அரசியல் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நோக்கத்திற்காக தமிழக அரசியல் தலைவர்களை நேரில் சந்தித்து நிலைமைகளைத் தெளிவுபடுத்தவும் அவர்களது ஆதரவைப் பெறுக்கொள்ளவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உயர்மட்டக் குழு இவ்வாரம் சென்னை செல்கிறது.

இச்சந்திப்புகளில் கலந்துகொள்வதற்காகப் பின்வரும் பிரதிநிதிகள் சென்னை செல்லவுள்ளனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (பாராளுமன்ற உறுப்பினர் & தலைவர் - த.தே.ம.மு), பொ. ஐங்கரநேசன் (தலைவர் - தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்), செல்வராஜா கஜேந்திரன் (செயலாளர் - த.தே.ம.மு), த. சுரேஸ் (தேசிய அமைப்பாளர்), க. சுகாஷ் (சிரேஷ்ட சட்டத்தரணி & உத்தியோகபூர்வ பேச்சாளர்), ந. காண்டீபன் (சிரேஷ்ட சட்டத்தரணி & பிரசாரச் செயலாளர்) ஆகியோர் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். *(ம-7)*

## ரூ. 200 பில்லி...

இலங்கையில் நிலவிய அனர்த்த நிலைமையினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் குறித்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் விரிவான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி வீதி மற்றும் மின்சாரத் துறைகளுக்கே அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை மின்சார சபைக்கு (CEB) சுமார் 20 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதேபோல லெகோ (LECO) நிறுவனத்திற்கு 252 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 5.6 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 156 நீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே சீரமைக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியங்கள் ஊடாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மின்சார சபை போன்ற நிறுவனங்கள் மேலதிகக் கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக வெளிநாட்டு நிதியுதவிகளை நாட வேண்டும் என்றும் வீதிகளைப் புனரமைக்க முறையான நிதி ஒதுக்கீட்டுப் பொறிமுறையை அமைச்சு உருவாக்க வேண்டும் என்றும் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் வலியுறுத்தினார். *(ம-7)*

## அவுஸ்திரேலியா- இங்கிலாந்து மோதும் ஆஷஸ் தொடரின் 3 ஆவது போட்டி இன்று!

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் பெர்த், பிரிஸ்பேன் ஆகிய இடங்களில் நடந்த முதல் இரு டெஸ்டுகளிலும் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்று தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் இன்று புதன் கிழமை தொடங்குகிறது.

அடிலெய்டு மைதானத்தில் அவுஸ்திரேலியா விளையாடிய 11 டெஸ்டில் ஒன்றில் மட்டுமே தோற்றுள்ளது. அதுவும் கடந்த ஆண்டு நடந்த இரண்டு டெஸ்டிலும் எதிரணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் புரட்டியெடுத்தது.

காயத்தால் முதல் இரு டெஸ்டை தவறவிட்ட அவுஸ்திரேலிய கட்டனும் வேகப்பந்து வீச்சாளருமான பேட் கம்மின்ஸ் அணிக்கு திரும்புகிறார். ஏற்கனவே மிட்செல் ஸ்டார்க் மிரட்டும் நிலையில், கம்மின்சின் வருகை பலத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த டெஸ்டிலும் வென்று தொடரை கைப்பற்றும் உத்வேகத்துடன் அவுஸ்திரேலியா வரிந்து கட்டும்.

அவர்களின் வீரநடைக்கு இங்கிலாந்து முட்டுக்கட்டை போடுமா? அல்லது மறுபடியும் சரண் அடையுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். *(3)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் வேகமாகப் பரவும் எச்.ஐ.வி தொற்று

(கொழும்பு) ..........................

**இலங்கையில் எச்.ஐ.வி தொற்று பரவல் முன்னெப்போதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக ஆங்கில ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இதன்படி 2025 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மாத்திரம் 600 இற்கும் மேற்பட்ட புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்புத்திட்டம் கவலை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் சுமார் 639 எச்.ஐ.வி வழக்குகள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 6% அதிகரிப்பாகும்.

இக்காலப்பகுதியில் எச்.ஐ.வி தொடர்பான பாதிப்புகளால் சுமார் 30 மரணங்கள் பதிவாகியுள்ளன.

தவறான புரிதல்கள், பாதுகாப்பற்ற நடத்தைகள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு போன்றவை இந்த அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெறுவதன் மூலம் இதன் பாதிப்பைக் குறைக்க முடியும் என சுகாதாரப் பிரிவு வலியுறுத்துகிறது. (நி)

## அனைத்து பாடசாலைகளுக்கும் கிறிஸ்துமஸ் விடுமுறை

(கொழும்பு)

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு பாடசாலைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை மூடப்பட்டு மீண்டும் 29 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இடை நிறுத்தப்பட்டுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை கருத்திற்கொண்டு அனைத்து பாடசாலைகளும் மீண்டும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். அத்துடன், கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 02 ஆம் திகதி வரை மீண்டும் பாடசாலைகள் மூடப்படவுள்ளன. இதே வேளை ஊவா மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளையும் இம் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளைத் திறக்க முடியாமைக்கு முக்கிய காரணம் போக்குவரத்து அசௌகரியங்கள் அல்லது நிவாரண முகாம்கள் இயங்குவதே ஆகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## டில்லி - ஆக்ரா நெடுஞ்சாலையில் கோர விபத்து; 13 பேர் உயிரிழப்பு

(டில்லி)

உத்தரபிரதேசத்தில் உள்ள டில்லி-ஆக்ரா நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலையில் அடர்ந்த மூடுபனி காரணமாக ஏற்பட்ட பயங்கர விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

மேலும் இந்த விபத்தில் சுமார் 75 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.


யமுனா நெடுஞ்சாலையில் சாலையின் ஆக்ரா-நொய்டா வீதியில் இந்த விபத்து நிகழ்ந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அடர்ந்த மூடுபனி காரணமாக மோசமான தெரிவுநிலையால் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

இதனால், தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. விபத்து குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி)

18 நாட்களின் பின்

# பதுளை- ஹப்புத்தளை தொடரூந்து சேவை



(கொழும்பு)

சமீபத்தில் தாக்கிய டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பதுளை-ஹப்புத்தளை தொடரூந்து சேவை, 18 நாட்களுக்குப் பிறகு மீண்டும் தொடங்கத் தயாராக உள்ளதாக சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க அறிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடகத்தில் பதிவிட்ட பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க, நேற்று முன்தினம் பதுளை தொடரூந்து நிலையத்தில் இருந்து ஹப்புத்தளை தொடரூந்து நிலையம் வரை பரீட்சார்த்த தொடரூந்து வெற்றிகரமாகப் பயணித்தது என குறிப்பிட்டுள்ளார்.

இது பேரிடருக்குப் பின் தொடரூந்து சேவைகளை மீட்டெடுக்கும் முயற்சியின் வெற்றியைப் பறைசாற்றுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சவாலான பணியை நிறைவேற்ற சோர்வின்றி உழைத்த இலங்கை தொடரூந்து திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அனைத்து தொடரூந்து நிறுவனங்களின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## மீட்கப்பட்ட பணம், நகைகள் உரிமையாளரிடம் ஒப்படைப்பு

(ஹற்றன்)

ஹங்குரான்கெத்த பிரதேச செயலக அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட இலங்கை இராணுவப் படையினர், மண்சரிவால் வீடு முற்றிலுமாக அழிக்கப்பட்ட ஒரு வீட்டு உரிமையாளரிடம் மீட்கப்பட்ட தனிப்பட்ட உடைமைகளை ஒப்படைத்தனர்.

துப்புரவு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது, பாதிக்கப்பட்ட வீட்டின் இடிபாடுகளில் இருந்து சுமார் 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள தங்க ஆபரணங்கள், 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பணத்தைப் படையினர் மீட்டனர். மீட்கப்பட்ட மதிப்புமிக்க பொருட்கள் அப்பகுதியில் வசிப்பவர்கள் முன்னிலை யில் கவனமாக உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. (நி)

# இராசிபலன்

17.12.2025
மார்கழி 02 , புதன்கிழமை
திரியோதசி பின்னிரவு 3.38 மணி வரை

விசாகம் முன்னிரவு 6.47 மணிவரை
சுபநேரம் 4.52-6.22 மணிவரை
இராகுகாலம் 12.22-1.52 மணிவரை

பிரதோச விரதம், சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்-
ரேவதி, அச்சுவினி.

வளவன்



மேஷம்: ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கௌரவக்குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.



கடகம்: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



துலாம்: வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



மகரம்: திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



ரிஷபம்: செய்தொழில் மேன்மையுண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.



சிம்மம்: பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



விருச்சிகம்: கற்பனை மிகுதியான நாள், வழிபாடு குதூகலம் தரும், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.



கும்பம்: பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.



மிதுனம்: வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு.



கன்னி: நீண்ட நாளை பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



தனுசு: திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.



மீனம்: அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.

பட்டை தீட்டதீட்ட வைரம் பொலிவாகும் தடைகளைத் தாண்டத்தாண்ட உன் வாழ்க்கை பலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோண்டாவில் இந்து மயானத்திற்கு அருகில்

# கழிவுகளை வீசிச் செல்வோரால் பயணிக்க முடியாத நிலை

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு அருகில் கழிவுகளை வீசிச் செல்பவர்களால் அவ்வீதியூடாக பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த இந்து மயானத்திற்கு அருகாமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் விடுதி , யாழ்ப்பாண நகருக்கு குடிநீரை வழங்கும் கிணறுகள் காணப்படுவதுடன் அவ் வீதியூடாக பெருமளவானோர் தமது பயணத்தினையும் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்கு வருவோரும் பல்வேறு இன்னல்களை சந்திக்கின்றனர்.

இந்நிலையில் அப்பகுதிகளில் உணவு கழிவுகள், கோழி இறைச்சி கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை வீசிச்செல்வதனால், அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன் அவற்றின் கழிவுகளை நாய்கள் வீதியில் இழுத்து விடுவதால் வீதியில் பயணிப்போரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் அவற்றை காகங்கள் உள்ளிட்டவை எடுத்துச் சென்று அயல்களில் போடுவதனால் அப்பகுதிகளிலும் சுகாதார சீர்கேடுகளும் இடம்பெறுகின்றன.



எனவே குறித்த பகுதிகளில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் அப்பகுதிகளில் கண்காணிப்பு கமராக்களை பொருத்தி கழிவுகளை வீசிச்செல்வோரை இனம் கண்டு , அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-33)

## வலி.தெற்கு பிரதேச சபை பாதீடு 25 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு, சபை உறுப்பினர்களின் 25 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

31 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சபை அமர்வு, தவிசாளர் தியாகராசா பிரகாஷ் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது, 2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டுப் பிரேரணையை தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

இந்நிலையில் சபையின் ஆளும் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 12 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் 6 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 6 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஒரு உறுப்பினர் என மொத்தமாக 25 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் 5 உறுப்பினர்களும் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர்.

அத்தோடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஒரு உறுப்பினர் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிலையில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு 25 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளன. (8-33)

### பசுமை அமைதி விருதுகளுக்கான

## சூழல் பொது அறிவுப் பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 2025ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டுச் சூழல் பொதுஅறிவுப் பரீட்சை இணையவழியூடாக எதிர்வரும் 28.12.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று முன்னிரவு 7 மணி தொடங்கி 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும். இலவசமாக நடைபெறவுள்ள இப்பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnationalgreen.org என்ற இணையத்தளத்தின் ஊடாக 25.12.2025. இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண் டும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## பூநகரி பிரதேச சபை பாதீடு 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான பூநகரி பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் தவிசாளர் சிவகுமாரன் சிறீரஞ்சனால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சபை அமர்வில் முன்வைக்கப்பட்டது.

இந் நிலையில் உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளாத நிலையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதற்கு ஆதரவாக தமிழரசுக் கட்சியின் 10 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி 1 உறுப்பினரும், அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சி 1 உறுப்பினரும் சுயேட்சைக்குழு 2 இன் 1 உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

எதிராக தேசிய மக்கள் சக்தியின் 2 உறுப்பினர்களும், சுயேட்சைக்குழு 1 இன் 1 உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர். நடுநிலைமையாக ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் 3 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தியின் 1 உறுப்பினரும் வாக்களித்தனர். (8-316)

## கெருடாவில் காட்டுப்புலம் வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபையின் நிதிமூலம் சபையின் முதலாம் வட்டாரமான கெருடாவில் காட்டுப்புலம் முதலாம் ஒழுங்கை வீதி புனரமைக்கும் பணியானது தவிசாளர் உதயகுமார் யுகதீஸினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வட்டாரத்தின் உறுப்பினர் சபையின் உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 1000 | 600 | 700 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 800 | 1200 | 500 | 800 | 700-800 |
| தக்காளி | 400 | 500 | 350 | 600 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 200 | 250 | 180 |
| கோவா | 250 | 260 | 350 | 400 | 250 |
| கரட் | 200 | 330 | 350 | 400 | 320 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 | 100 |
| புடோல் | 300 | 400 | 350 | 400 | -- |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 250-300 | 250 | 400 | 220 |
| பெரிய வெங்காயம் | 200 | 230 | 280 | 300 | 220 |
| பாகற்காய் | 1000 | 1500 | 1500 | 1600 | 1400 |
| வெண்டக்காய் | 300 | 300 | 300 | 200 | 250 |
| கருணைக்கிழங்கு | 350 | 260 | 250 | 400 | -- |
| பயற்றங்காய் | 600 | 650 | 1000 | 1200 | 600-700 |
| லீக்ஸ் | 350 | 330 | 300 | 400 | 320 |
| பீற்றூட் | 350 | 500 | 450 | 500 | 500 |
| கறிமிளகாய் | 1200 | 900 | 800 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | 2000 | -- |
| போஞ்சி | 700 | 800 | 1000 | 1000 | 800 |
| கத்தரிதம்புள்ள | 800 | 600 | 600 | 600 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 100-150 | 200 | 200 | -- |
| தேசிக்காய் | 600 | 1000 | 250 | 400 | -- |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 100 | 160-200 | -- |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 600 | -- |
| வெங்காயப்பூ | -- | -- | 1000 | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 250 | 200 | 400 | -- |
| பொன்னாங்காணி | 80 | 120 | 150 | 80 | -- |
| வல்லாரை | 60 | 70 | 80 | 100 | -- |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 200 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீள்கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 17.12.2025 தொடக்கம் 30.12.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :-31.12.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 31.12.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபம்

**கேள்விஅட்டவணை**

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/06 | ரூபா 6,089,580.00 | ரூபா 9,000.00 | ரூபா 91,343.70 | ரூபா 2,000.00 |

நிபந்தனைகள்-

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும், சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "தவிசாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைத் தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 31.12.2025ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
12. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் தவிசாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.** (C-4589) 17.12.2025

# சட்டவிரோத கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பினை வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது 125 லீற்றர் கசிப்பினை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)

# புதிய நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு தென்பகுதி நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

**இந்நிகழ்வில் தலைவராக ச.கவி**கரன் உபதலைவராக நா.இராசேந்திரம், நிர்வாக உறுப்பினர்களாக மு.விக்னே ஸ்வரன், தே.டெனிஸ்ரன், சே.மதன கோபி, பொ.அமிர்தலிங்கம், க.மயூரிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 246/8, டச்சு வீதி, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02. டச்சு வீதியிலுள்ள 246/08 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **அம்பலம் சின்னையா** ஆகியவர், குறித்த ஆதனம் தனது மைத்துனர் இராசதுரைக்கு சொந்தமாக இருந்தது எனவும், அவர் தனக்கு தரவேண்டிய காசிற்கு 37 வருடங்களுக்கு முன்னர் குறித்த ஆதனத்தினை தனக்கு அறுதியாக எழுதித் தந்திருந்தார் எனவும், எனினும் குறித்த மூலஉறுதி காணாமல் போய் விட்டதெனவும். எவ்வாறெனினும் குறித்த ஆதனத்தினைக் கடந்த 37 வருடங்களாக தானே தங்கு தடையற்றதும் எவருக்கும் மாறானதும் சுயாதீனமானதுமான ஆட்சி செய்து கொண்டு வருவதாகவும், அதன் பிரகாரம் ஆட்சியுரிமைக் கட்டத்தின் மூன்றாம் பிரிவின் கீழ் தான் ஆட்சியுரிமை பெற்று விட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் 7011/16.02.2003ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சின்னையா குகனேசன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7012/16.02.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலம் சின்னையா** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**பொன்னையா துரைசிங்கமும் பெண் ஈஸ்வரியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9875/04.10.2008ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னையா குகநேசனும் பெண் பரமேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"குடியிருப்பு"**
இறை: **தொல்புரம் இறை தற்போது தொல்புரம் மேற்கு இறை**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 2**
எல்லைகள்: **கிழக்கு** - ஒழுங்கை **வடக்கு**-ஒழுங்கை **மேற்கு**-கனகன் நல்ல சேகரத்தின் உரித்தாளரின் ஆதனம் **தெற்கு**- பொன்னையா துரைசிங்கத்துக்கும் பெண் ஈஸ்வரிக்கும் உரிய ஆதனம்
குறித்த **பொன்னையா துரைசிங்கமும் பெண் ஈஸ்வரியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **பொன்னையா துரைசிங்கமும் பெண் ஈஸ்வரியும்** ஆகியவர்கள் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை** (6191)

## பகிரங்க ஏல அறிவித்தல் -2026
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச் சந்தைகளை 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் 2026.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரப்படுகின்றது.

**இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**
**திகதி : 2025.12.23 (செவ்வாய்க்கிழமை)**
**நேரம் : மு.ப.10.00 மணி**

| இல | விபரம் | மீளளிக்கப்படாத ஏல வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|
| **மானிப்பாய் கிராம உபஅலுவலகம்** | | | |
| 1 | நவாலி பிரசாத் பொதுச்சந்தை | 500.00 | 130,321.00 |
| **பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்** | | | |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 500.00 | 6,552,150.00 |
| **பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம்** | | | |
| 1 | இளவாலை பொதுச்சந்தை | 500.00 | 154,689.00 |
| 2 | மாதகல் பொதுச்சந்தை | 500.00 | 399,086.00 |


1. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையையும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதியையும் கொண்டுவருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம் ரூபா.500.00 இனை எமது சபை தலைமை அலுவலகத்தில் 2025.12.23 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
2. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
3. பிரதேசசபையின் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
4. ஏலம் சம்மந்தமான மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.** (C-4587)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

# சிட்னி துப்பாக்கிச்சூடு சம்பவம் ரியல் ஹீரோவை சந்தித்த பிரதமர்





(கன்பெரா)

அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் மாகாணம் சிட்னி நகரின் போண்டி கடற்கரையில், கடந்த 14 ஆம் திகதி மாலை யூத மத பண்டிகையான ஹனுக்கா கொண்டாட்டம் நடைபெற்றது.

அப்போது அங்கு வந்த அடையாளம் தெரியாத இரண்டு பேர், கூட்டத்தினரை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில், 16 பேர் பலியாகினர் சுமார் 42 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின்போது, தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவரை, அஹ்மத் அல் அஹ்மத் (43) என்பவர் துணிச்சலுடன் மடக்கிப் பிடித்தார்.

அப்போது, மற்றொருவர் அஹ்மத் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் படுகாயமடைந்த அஹ்மத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரை, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் மற்றும் நியூ சவுத் வேல்ஸ் முதல்வர் கிறிஸ் மின்ஸ் நேரில் சந்தித்து பாராட்டினார்கள்.

அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், அஹ்மத், நீங்கள் ஒரு அவுஸ்திரேலிய வீரர். மற்றவர்களை காப்பாற்ற உங்கள் உயிரை ஆபத்தில் இட்டீர்கள் - போண்டி கடற்கரையில் அபாயத்தை நோக்கி ஓடி, ஒரு பயங்கரவாதியை நிராயுதபாணியாக்கினீர்கள்.

மிக மோசமான தருணங்களில்தான் அவுஸ்திரேலியர்களின் சிறந்த பண்புகள் வெளிப்படும்.

ஞாயிற்றுக் கிழமை இரவில் நாம் அதையே கண்டோம். ஒவ்வொரு அவுஸ்திரேலியரின் சார்பாகவும், உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

சிட்னியின் பொண்டாய் கடற்கரையில் நடந்த துப்பாக்கிச்சூட்டின் போது, தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவரிடமிருந்து துப்பாக்கியைப் பறித்ததுடன் அஹ்மத் அல் அஹ்மத்திற்கு அவுஸ்திரேலியா முழுவதிலும் இருந்து நன்கொடைகள் குவிந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் மொத்தத் தொகை தற்போது 1.1 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை (744,000 அமெரிக்க டொலர்கள்) தாண்டியுள்ளது.

இதற்கிடையில், 'அஹ்மத்துக்கு ஆதரவாக அமைக்கப்பட்ட 'Go FundMe' பிரசாரம், ஒரே நாளில் 1.1 மில்லியன் அவுஸ்திரேலிய டொலருக்கும் அதிகமாக நிதி திரட்டியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

# பாலஸ்தீனத்தை அவுஸ்திரேலிய

## இஸ்ரேல் சாடல்:

(கன்பெரா)

**சிட்னியின் போண்டி கடற்கரையில் நடந்த யூத எதிர்ப்பு பயங்கரவாதத் தாக்குதலுக்கு பாலஸ்தீனத்தை அவுஸ்திரேலியா அங்கீகரித்தமையே காரணம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு குற்றம் சாட்டினார். ஆனால் இந்த குற்றச்சாட்டை அவுஸ்திரேலியப் பிரதமர் அல்பனிஸ் நிராகரித்துள்ளார்.**

அவுஸ்திரேலியாவின் நியுசவுத் வேல்ஸ் மாகாணத்தின் சிட்னி நகரில் போண்டி என்ற இடத்தில் உள்ள கடற்கரை மிகவும் பிரபலமானதாகும்.

விடுமுறை நாட்களில் இந்தக் கடற்கரையில் மக்கள் கூட்டம் அலை மோதும்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மக்கள் கடற்கரையில் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்த நிலையில், அங்கு வந்த 2 மர்ம நபர்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த துப்பாக்கிச்சூட்டில் 16 பேர் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடத்திய இருவரும் தந்தை, மகன் என்றும் அவர்கள் பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு தொடக்கத்தில் பாலஸ்தீனத்தை அவுஸ்திரேலியா அங்கீகரித்தது.

சிட்னியின் போண்டி கடற்கரையில் நடந்த யூத எதிர்ப்பு பயங்கரவாத தாக்குதலுக்கு ஒரு காரணியாக இருந்தது என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு குற்றம்சாட்டினார். ஆனால்


# கஞ்சா உற்பத்தி தொழிற்சாலை நிறுவ ஸ்கொட்லாந்து திட்டம்

(எடின்பேர்க்)

ஸ்கொட்லாந்தில் ப்ரீத் லைஃப் சயின்சஸ் (BLS) என்ற பல்தேசிய மருத்துவப் பொருள் நிறுவனம் ஸ்கொட்லாந்தின் எல்லைகளில் ஒரு கஞ்சா உற்பத்தி நிறுவனம் நிறுவத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஒரு கஞ்சா உற்பத்தி நிறுவனம் அடுத்த ஆண்டு இறுதியில் திறக்கப்படும்போது 36 வேலைகளையும், மூன்று ஆண்டுகளுக்குள் சுமார் 100 வேலைகளையும் உருவாக்கும் என நிறுவனம் உறுதியளிக்கிறது.

இங்கிலாந்தில் மருத்துவ கஞ்சா சட்டப்பூர்வமாக்கப்பட்ட பின்னர் வளர்ந்து வரும் சந்தை மற்றும் ஐரோப்பாவில் இங்கிலாந்து வேகமாக வளர்ந்து வரும் பகுதி என்று நிறுவனத்தின்



பிரதானிசாம் வாட்சன் இந்த திட்டத்திற்கு காரணம் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வெளிநாடு

# ...தை அங்கீகரித்ததால்

# ...யாவுக்கு இந்த நிலை

## ...: அவுஸ்திரேலியா மறுப்பு

...ற் ...பு ...கு ...ா ...ன ...ற் ...ற் ...ிர ...ர.



...னமாக ...துப்பாக் ...ர். ...வரும் ...யர்கள் ...சேர்ந்த ...தொடக் ...வுஸ்தி ...ரையில் ...ரவாத ...இருந் ...ரதமர் ...னால்

இந்தக் குற்றச்சாட்டை அவுஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனீஸ் நிராகரித்துள்ளார்.

தேசிய் ஊடகங்களுக்கு அல்பனீஸ் அளித்த பேட்டியில், அந்த அங்கீகாரத்திற்கும் போண்டி படுகொலைக்கும் ஏதேனும் தொடர்பு இருப்பதாக அவர் நம்புகிறாரா என்று செய்தியாளர் கேட்டபோது, அல்பானீஸ், “இல்லை, நான் அதை சந்தேகிக்கிறேன். உலகின் பெரும்பகுதியினர் இரு நாடு தீர்வை மத்திய கிழக்கில் முன்னோக்கிச் செல்லும் வழியாக ஏற்றுக்கொள்கிறார்கள்" என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், “இது தேசிய ஒற்றுமைக்கான தருணம். நாம் ஒன்றுபட வேண்டும். அசாதாரணமான மற்றும் கடினமான காலகட்டத்தை கடந்து செல்லும் யூத சமூகத்தினருடன் நாம் கைகோர்க்க வேண்டும்.

இந்தக் கடினமான நேரத்தில் அவுஸ்திரேலியர்கள் யூத சமூகத்துடன் நிற்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்துவதே எனது வேலை" என்று கூறினார்.

பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதற்கான அவுஸ்திரேலியாவின் முடிவை பயங்கரவாதத்திற்கு வெகுமதி அளிப்பதாக நெதன்யாகு முன்னதாக கண்டித்திருந்தார். (3)




இதேவேளை, இந்த முயற்சியானது இங்கிலாந்தில் தற்போது பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படும் தயாரிப்புகளுக்கான உள்ளூர் மருந்து உற்பத்தி கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2018இல் சட்டப்பூர்வமாக்கப்பட்ட திலிருந்து, இந்தச் சந்தை ஆண்டுக்கு சுமார் 250 மில்லியன் மதிப்பைக் கொண்டுள்ளது. (3)

...த்திற்கு

## பிரேசிலில் வீசிய பலத்த காற்றால் சரிந்து விழுந்த சுதந்திர தேவி சிலை



(பிரேசிலியா)

பிரேசிலின், குவைபாவில் வீசிய பலத்த காற்று காரணமாக சுதந்திர தேவி சிலை சரிந்து விழுந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


பிரேசிலின் ரியோ கிராண்டே டோ சுல் மாநிலத்தில் புயல் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், பிரேசில் நேரப்படி பிற்பகல் 3 மணியளவில் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய கடுமையான காற்று மற்றும் புயல் காரணமாக குவைபா நகரில் உள்ள “ஹவன்” சில்லறை விற்பனைக் கடையின் முன் அமைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய சுதந்திரதேவி சிலை திடீரென சரிந்து விழுந்தது.

இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என அந்நாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், சிலை சரிந்த பிறகு அப்பகுதியில் சிறிய குழப்பம் ஏற்பட்டதுடன், சிலை சரிவு உள்ளூர் விவாதப் பொருளாகவும் மாறியுள்ளது.

இந்தச் சிலை 1900 களின் முற்பகுதியில் நிறுவப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலர் சிலை இடிந்து விழுந்த காட்சியைப் காணொளியாக பதிவு செய்து சமூக ஊடகங்களில் பதிவேற்றியுள்ளதுடன் அவை தற்போது வைரலாகி வருகிறது. (3)



## மொராக்கோவில் கடும்மழை; 37 பேர் உயிரிழப்பு



(ரபாட்)

மொராக்கோவின் சஃபி மாகாணத்தில் ஏற்பட்ட கடும் மழையால் வெள்ளத்தில் 37 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொராக்கோவின் தலைநகர் அருகே இருக்கும் சஃபி மாகாணத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் கனமழை பெய்து வருகிறது.


இந்தக் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 37 பேர் உயிரிழந்து 20இற்கும் மேற்பட்டோர் தீவிர சிகிச்சையில் உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், வெள்ளம் ஊருக்குள் வரும்போது வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களை அடித்து தள்ளிச் செல்லும் காட்சிகள் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

மேலும், மொராக்கோவின் முக்கிய நீர்த்தேக்கங்கள் சிலவற்றை வறளச் செய்த ஏழு ஆண்டுகால வறட்சியைத் தொடர்ந்து, அட்லஸ் மலைகளில் கடும் மழை மற்றும் பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமண ரத்ன தேரருக்கு எதிராக நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(கொழும்பு)

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு சுமண ரத்ன தேரரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் துறையினர் தெரிவித்தனர்.

கையடக்கத் தொலைபேசி சமிஞ்சைகளை அடிப்படையாகக்கொண்டு அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸார் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இனங்களிடையே முறுகலை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்தமை தொடர்பில் மட்டக்களப்பு அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணை நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன் தேரருக்கு வெளிநாட்டு பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தேரருக்கு எதிரான வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மட்டக்களப்பு நீதவான் நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 - இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
7இல்செவ்
கி-பா: 49
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, WORK(PVT)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16324

பிறப்பு:1999- RC
நட்சத்திரம்:விசாகம்
கி-பா- 22 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்- BSC,Sofrware Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16325

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:மகம்
கி-பா-35
உயரம்:5'7"
தகைமை/தொழில்-MBBS,Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/16326

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா:28
1 இல்செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-MBA,Work(pvt)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/16327

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:பூரம்
7 இல் செவ்
உயரம்:6"
தகைமை/தொழில்: A/L, Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16328

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 - இந்து
நட்சத்திரம்-கேட்டை
கி-பா-26 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BBST,WORK(PVT)
எதிர்பார்ப்பு:வெளிநாடு, அரச தொழில்
தொ.இ: G/16320

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்-புனர்பூசம்
கி-பா- 43 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BST
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16321

பிறப்பு: 2001-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Pharmacist
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16323

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:அத்தம்
8 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - BCOM, Accountant (pvt)
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16336

பிறப்பு-1987 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
4 இல் சூரி செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MSc, UK
எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/16340

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 501

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## துறவு!

ஒரு ஊரிலே ஒரு வைர வியாபாரி இருந்தார். அவருக்கு ஒரு மனைவி. அவர்கள் இரண்டுபேர் மட்டும்தான். குழந்தைகள் கிடையாது.

அவர்கள் இரண்டு பேருக்குமே ரொம்பவும் தாராள மனது. இருக்கின்ற செல்வத்தையெல்லாம் வாரி வாரி வழங்கினார்கள்.

அப்படியும் முழுமையான மனநிறைவு, மன அமைதி கிடைக்கவில்லை.

அவர் ஒருநாள் தன் மனைவியிடம் சொன்னார். “இதோ பார். நான் ஒரு பரதேசியாகி இந்த ஊரை விட்டே வெளியேறப் போகிறேன். அதற்கு முன்பு இருக்கின்ற சொத்தையெல்லாம் தான தருமம் செய்யப் போகிறேன். அதனாலே உனக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் முதலிலே நீ எடுத்துக்கொள்!” என்றார்.

அந்த அம்மா பார்த்தார். “நீங்கள் போன பின்பு அப்புறம் எனக்கும் மட்டும் என்ன இருக்கிறது? பிள்ளையா குட்டியா - நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன்!” என்றார்.

உன்னாலே ஊர் சுத்த முடியாது. காடு மேடெல்லாம் அலைய முடியாது. பசி, பட்டினி, குளிர், வெயில் எல்லாத்திற்கும் ஈடு கொடுக்க வேண்டியிருக்கும் அதனாலே உனக்கு இது வேண்டாம்” என்றார்.

ஆனால் அந்த அம்மா பிடிவாதமாக நான் வந்தே தீருவேன் என உறுதியாக சொல்லிவிட்டார்.

வேறு வழியில்லாமல் அவர்களையும் அழைத்துக்கொண்டு அவர் புறப்பட்டார். அதற்கு முன்பு இருப்பதையெல்லாம் வாரி வாரி வழங்கினார். கடைசியாக கழுத்திலே இருக்கிற நகைகளையும் கழட்டினார் அந்த அம்மா.

“என்ன இது- அதையும் கழட்டுகிறாய் நம் கல்யாணத்திற்கு அடையாளமே அதுதானே.” என்றார் இவர்.

“எப்போது நாம் துறவு வாழ்க்கையை தொடங்கி விட்டோமோ அப்போதே கணவன் - மனைவி என்ற பந்தம் போய் விட்டது. இனிமேல் நீங்கள் வேறு, நான் வேறு இருந்தாலும் நாம் இப்போது ஒன்றாக சேர்ந்து போவது எதற்கு என்றால் ஒருவருக்கொருவர் உதவியாகத்தான்.

கழுத்திலே ஒரு சங்கிலி கிடந்தால், கஷ்டம் வரும்போது அதை விற்றுக் காசாக்கலாமே என்ற எண்ணம் வரும். அதனாலே அது வேண்டாம்!” என்று விட்டார்.

அதன்பின் அவர்கள் இரண்டுபேரும் பல ஊர் சுத்தினார்கள், வெயில், மழை, பசி , பட்டினி. அவருக்கு அந்த அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இவ்வளவு கஷ்டத்திற்கும் ஈடு கொடுக்கிறாளே என்று ஆச்சரியமாகவும் இருந்ததாம்.

நீ ஊருக்குத் திரும்பிப் போய்விடு என்றும் சொல்லிப் பார்த்தார். “சுவாமி, நீர் இப்போது எம் கணவரல்ல. உம் பேச்சை எல்லாம் கேட்பதற்கு!” என்றார் மனைவி. இப்படியே கொஞ்ச காலம் போனது.

ஒருநாள் அவர்கள் இரண்டு பேரும் ஒரு காட்டு வழியாக சென்றுகொண்டிருந்தார்கள்.

வழியிலே ஒரு பெரிய மாணிக்கக் கல் கிடந்தது. முன்னாலே சென்றுகொண்டிருந்த அவர் அதைப் பார்த்துவிட்டார்.

“பின்னாலே வந்துகொண்டிருந்த தன்னுடைய மனைவி கண்ணிலே இது பட்டுவிட்டால் மறுபடியும் உலக ஆசை வந்து சந்நியாசத்தை விட்டாலும் விட்டு விடுவாள்!” என்று நினைத்து அதைக் காலாலே மிதித்து மறைத்துவிட்டார்.

பின்னாலே வந்த அந்த அம்மா.. “அது என்ன சுவாமி காலாலே மிதித்துக்கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“இது வந்து மாணிக்கக்கல்! இதைப் பார்த்து உனக்கு உலக ஆசைகள் வந்து, மனம் மாறிப் போய் விடுமோ என்று பயந்துதான் இதை மறைத்தேன்!” என்றார் அவர்.

இதற்கு அந்த அம்மா சொன்னார். “சுவாமி! தங்களுக்கு இன்னமும் மாணிக்கத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் வித்தியாசம் தெரியுதா? எனக்கு இரண்டும் ஒன்றாகத்தான் தெரிகிறது!” என்றார்களாம்.

இதிலியிருந்து என்ன தெரிகிறது. துறவு என்பது அவ்வளவு சாதாரண சமாச்சாரமில்லை!

இந்தக் காலத்து ஆசாமி ஒருவர். “எனக்கு என்று இருக்கிறது எல்லாத்தையும் விட்டுவிட்டு சந்நியாசி ஆகப் போகிறேன்!” என்றார். “உனக்கு என்று இருக்கிறது எவ்வளவு?” என்றேன்.

“எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் மொத்தமாக ஒரு 50,000 ரூபாய் தேறும்” என்றார்.

“என்ன சொத்தா” என்று கேட்டேன். “இல்லை ! கடன்!” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மண்ணும் மகிமையும்



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உலக மண் தினம் (World soil day) வருடாவருடம் டிசம்பர் 5இல் கொண்டாடப்படுகின்றது. உலகளாவிய மண்ணியல் விஞ்ஞான பேரவையினால் (International Union for Soil Sciences) 2002இல் பரிந்துரைக்கப்பட்டு உலக உணவு தாபனத்தால் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவ்வருடத்து கருப்பொருளாக "ஆரோக்கியமான நகரங்களுக்காக ஆரோக்கியமான மண் (Healthy soils for Healthy cities)ஆகும்". மண் சிறந்த ஊடகமாகும். இதனுள் பலவகையான உயிரினங்கள் வாழுகின்றன. மண்ணினுள் புதைந்த இன்னும் புதைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்தும் மண்ணின் உயிர்ப்பை உணர்த்தி நிற்கின்றன. அதனால் இதனை வாழும் மண் (Living soil) என அழைக்கின்றோம். எம்முடன் வாழ்ந்த உறவுகள் மண்ணிற்குள் சங்கமமாகி எம்மை வாழவைக்கின்றன எனப் பொருள்படும். இந்து சமயத்தில் இறந்தவர் உடலை எரியூட்டி அந்த இடத்தில் காடாத்து என்னும் சமய நிகழ்வின் போது புருவம் கட்டி அந்த நிலத்தை சிறு ஏர் கொண்டு உழுது நவதானியங்களை விதைத்து நீர் தெளித்து விடுவர். நவதானியங்கள் முளைத்து ஏனைய உயிரினங்களுக்கு உணவாகும் என்னும் பொருள் கொள்வதாக இதன் அர்த்தம்.

மண்ணினுள் அன்றி மண்ணிற்கு மேலும் உயிரினங்கள் வாழ்வதற்கு மண்ணின் பங்களிப்பு அவசியமானதாகும். ஒரு தாவரத்தின் மேற்பகுதியை இலகுவாக கண்ணினால் பார்த்து அதனது செயற்பாட்டை நாம் அனுமானிக்கலாம். ஆனால் மண்ணினுள் விசாலித்திருக்கும் வேர்த் தொகுதியை அதனுடனிணைந்த சூழலை அதிலிருக்கும் அங்கி களைப்பற்றி நாம் முழுமையாக அறிந்திலோம். இந்த மண் பல செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் உலக அதிசயமென்றால் மிகையாகாது. மண்ணிற்கான முக்கியத்துவத்தை அனைவரும் அறிய அடையாளப்படுத்தியிருக்கின்றார்கள் உலக உணவு தாபனத்தினர்.

உலக மண் தினத்தை டிசம்பர் 5இல் கொண்டாடுவது கனதியாகின்றது. உலகளாவிய ரீதியில் உணவு மற்றும் விவசாய நிறுவனம் (Food and Agriculture Organization) இதற்காக பல வழிகளை கையாண்டு இந்த தினத்தை உலக மக்கள் அனைவரும் அறிந்துணர செய்திருக்கின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்திலும் இத்தினம் பல வகையான காட்சிப் பொருட்களுடன் கண்காட்சியுடன் வனங்களின் கட்டமைப்பை எமது மக்களின் அபிவிருத்தியுடன் இணைத்து மாணவர்கள் விளக்கி எடுத்தியம்பினர். இதில் விவசாய பீடாதிபதி பேராசிரியர் பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா. வேதநாய கன் மற்றும் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகர் இவர்களுடன் ஆர்வலர்கள் பலரும் இணைந்து கொண்டனர். மண் தினத்தின் முக்கியத்துவம் பற்றி உலகமே கொண்டாடவேண்டிய தேவை எழுந்துள்ளதற்கு பல காரணங்களை இனங்கண்டாலும் அவற்றுள் உள்ளார்ந்து எழுந்திருக்கும் முக்கியகாரணமாக மண்வளத்தையும் அதனது பங்களிப்பினையும் குறிப்பிடலாம். மண்ணின் வளம் என்பது மண்சார்ந்திருக்கின்ற அனைத்து உயிரினங்களின் வாழ்க்கையையும் அவற்றின் வாழிடத்தையும் இவ்வாறான உயிரினங்களினால் மண்ணின் தன்மையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையும் சுட்டி நிற்பதாக பொருள் கொள்ளலாம். மண் அல்லது நிலம் என்பதனூடாக உயிர்ப்பின் தன்மையை வெளிக் காட்டுகின்றதனை காணலாம். அதாவது மண்ணிற்கு உயிருண்டு என கூறுவதில் தப்பேதுமில்லை. மண்ணிலுள்ள உயிர்ப்பின் தன்மையை அதில் பயிரிடும் எந்த வகையான பயிராக இருந்தாலும் அதன் வளர்ச்சியில், உற்பத்தியில் மண்ணின் பங்களிப்பு மிக மிக அதிகம். சிறந்த ஒரு ஊடகமாக மண் இருக்கின்றது என்னும் உண்மையை நாம் அநேகமான இடங்களில் மறந்தே போய்விடுகின்றோம்.

மண் என்பது ஒரு கலவை எனவும் வெறுமனே மண்துணிக்கைகளால் ஆனது என்று நாம் கணித்து விடக் கூடாது. கலவையானாலும் இந்தக் கலவை பல்வேறுபட்ட உயிரினங்களின் வாழிடமாக இருக்கின்றதென்றால் நம்ப




முடிகின்றதா? மண்ணினுள் பல்வேறு வகையான அங்கிகள் வாழ்கின்றன. பொதுவாக இந்த அங்கிகள் இன்னும் நுண்ணங்கிகள் மண்ணை வளப்படுத்தும் செயற்பாட்டுக் காகவே மண்ணில் பொதிந்திருக்கின் றன. மாறாக தீமை தரும் நுண்ணங்கி கள் மற்றும் உயிரினங்களும் இதனுள் உள்ளடக்கம். மண்ணில் அதிகளவில் நன்மை தரும் நுண்ணங்கிகள் காணப்படும் போது அதனை நாம் வளமுள்ள மண்ணாக எண்ணுகின்றோம். நுண்ணங்கிககள் மற்றும் அங்கிகளற்ற மண்ணில் எதுவுமிருக்காது. அதாவது அந்த மண்ணுக்கு உயிர்ப்பிருக்காது. மண்ணில் காணப்படும் அங்கிகள் மற்றும் நுண்ணங்கி களின் இயக்கத்தினால் காபன் வட்டம், நைதரசன் வட்டம் என பலவகையான ஊட்டச்சத்து மாற்றங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கு மண்ணில் உள்ள நுண்ணங்கிகளினதும் அங்கிகளினதும் செயற்பாடு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

மண்ணினை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்? மண்ணினை சிறப்பானதாக நீண்டகாலத்திற்கு வாழ்தகைமையுள்ளதாக முகாமைத்துவப்படுத்தி பாதுகாப்பதனால் பலவிதமான நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக காலநிலை மாற்றத்தினாலேற்படும் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு, பஞ்சத்தை இல்லாதொழிக்க, குடிப்பதற்கு நல்ல நீரை பெற்றுக் கொள்வதற்கு, உயிர்ப்பல்வகைத் தன்மையை பாதுகாத்துக்கொள்ள, இன்னும் மாறிவரும் சூழல்நிலைமைகளுக்குள் எம்மை பழக்கிக் கொள்ள, வரட்சியை தாக்குப்பிடிக்க, வாழ்வாதாரத்தை முன்னேற்ற, சூழல் மாசாக்கிகளின் அளவினை குறைக்க, சூழலில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள ஆகும். மண்ணில் சேதனகாபனின் அள வினை அதிகரிக்க தற்போது எங்களிடமுள்ள மண்ணினை அவசியம் நாம் பாதுகாக்க வேண்டும். உலகத்திலுள்ள மண்ணானது காபனினை அதிகளவில் கொண்டிருப்பதனால் அது வளியில் பச்சைவீட்டு வாயுக்களின் அளவை குறைப்பதற்கு உதவுகின்றது. மூன்றில் ஒரு பகுதி மண் விரயமாக்கப்பட் டிருக்கின்றது. பூமியிலுள்ள மண்ணினை பாதுகாப்பதனால் 51 ஜிகாடன்கள் காபனை வளிமண்டலத்திலிருந்து மண்ணினுள் பதிக்க முடியும். இதனால் காலநிலை மாற்றத்தினை நாம் இலகுவாக எதிர்கொள்ள முடியும். 2015 இலிருந்து 2050 வரையான காலப்பகுதியில் உணவுக்கான தேவை 49சதவீதத்தினால் அதிகரிக்கவிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாய உற்பத்திகள் அதிகரிக்க வேண்டிய தேவையும் அதிகரிக்கும் மக்கள்தொகைக்கு உணவூட்ட வேண்டிய பொறுப்பும் முன்னெழுந்துள்ளது. இதன்மூலமே நாம் இனங்கண்ட பேண்தகு அபிவி ருத்திக்கான நோக்கங்களை அடைய முடியும். இவையெல்லாவற்றிற்கும் எமக்கு வளமுள்ள மண் (Fertile soils) அவசியமாகின்றது. வளமான மண்ணில் தேவையா னளவு மண்காபன் நிறைந்திருக்கும் போது அது பயிர்களை சிறந்த முறையில் உற்பத்தி செய்வதற்கும் பயிர்கள் சிறப்பாக வளர்வதற்கும் வழிசெய்கின்றது. குறிப்பாக ஊட்டச்சத்துக்களின் மீள் சுழற்சியும் நீர் வடிந்து செல்லும் தன்மையும் மண்ணில் நீர்சேமிப்பதற்கான வழிவகைகளும் மேன்மையுறுவதற்கு இது வழி வகுக்கும். மண்ணில் சிறப் பான முகாமைத்துவத்தின் மூலம் மண்காபனின் அளவை அதிகரிப்பதால் உணவுற்பத்தியை வருடமொன்றுக்கு 17.6 மெகாடன்களால் அதிகரிக்க முடியும் என அறிய முடிகின்றது. இதன் மூலம் மொத்த உணவுற்பத்தியை வரட்சியான காலப்பகுதியிலும் அதிகரிப்பதற்கு வழிகிடைக்கும்.

அவ்வாறாயின் மண்ணிலுள்ள காபனின் அளவை அளந்தறிய முடிந் தால் பலபிரச்சினைகளுக்கு விடை கண்டிடலாம். ஆனால் இவ்வாறு அளவிடுவது இலகுவான காரிய மன்று. அதற்காக அதிகரித்த செலவும் அதிகமான வேலைப்பளுவும், இன்னும் சிறந்த ஆய்வு கூடமும் அவசியமாகும். அநேகமான நாடுகளில் மண்ணி லுள்ள காபனை மதிப்பிடு வதற்கு தேசிய மண்பற்றிய தகவல்கள் முழு மையாக இல்லை. ஆனாலும் வேறுபட்ட முறையியலினூடாக மண்ணி லுள்ள காபனை மதிப்பிடுவதும் சரியான தகவல்களை முழுமையாகத் தராது. இந்நிலையில் தான் உலக மண்தகவல் தொகுதி (Global Soil Information System - GLOSIS) உரு வாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முதலாவது உற்பத்தியாக உலக மண் காபன் வரைபடம் (Global Soil Organic Carbon Map – GSOC Map) உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்தந்த நாடுகள் தங்களது மண்வரை படத்தினதும் மண்ணின் காபன் வரை படத்தின் மூலமும் மண்ணில் காபனை வினைத்திறனாக சேமிப்பதற்கான தீர்மானங்களை எடுக்கமுடியும். இதன் மூலம் ஒரு நாட்டின் மண்ணின் தகவல்கள் பெறப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு அவை முக்கியமான சான்றாதாரங்களுட னான தீர்மானங்களை எடுப்பதற்கு பயன்படுகின்றன. மேலும் மண்ணரித்தலுக்குள்ளான பகுதிகள், வரட்சியான பகுதிகள் என்பன இலகுவில் இனங்காணப்பட்டு அவற்றினை மேலும் வினைத்திறனாக்குவதற் கான வழிகளை தேட வழிசெய்திருக் கின்றது. 2030ஆம் ஆண்டுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை அனைத்து இடங்களிலும் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த GSOC Map டிசம்பர் 5ஆம் திகதி உலகத்திலுள்ள மக்கள் பயன்பெறு வதற்காக உருவாக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.

மண்ணிலுள்ள சேதன காபனை பாதுகாப்பதற்காக இவ்வாறான வரைபடங்கள் உதவுவதோடு அவற்றை பாதுகாப்பாக பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்ட வ்ரை படங்களிலிருந்து மக்கள் தற்போது இவற்றைப் பற்றியறிந்து அதன்மூலம் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தவும் ஆவலாக உள்ளனர். மண்ணுக்கான முக்கியத்துவத்தை அறிவிக்கும் உலக மண்தினம் டிசம்பர் 5இல் மக்களால் எதிர்வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பாக கொண்டாடப்படல் வேண்டும். பூமித்தாயை நாம் பாதுகாத்தால் எம்மை பூமித்தாய் பாதுகாப்பார். அன்னை மண்ணைக் காப்பதில் நாம் என்றும் முன்னிற்க வேண்டும். அதன் வளத்தைப் பாதுகாப்பதில் எமது விவசாயச் செய்கைகள் திட்டமிடப்படல் வேண்டும். எமது எதிர்கால திட்டத்தில் மண்வளம் எள்ளளவேனும் குறையாமல் அதனை மேலும் அதிகரிக்க நாம் என்றும் முனைப்பு காட்டுதல் அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 935





வீண் பிரமை! தூக்கக் கலக்கம்! விளக்கின் ஒளியில் உண்டாகும் சிற்பங்களின் நிழல் தோற்றமாயிருக்க வேண்டும்!

மந்தாகினிக்கும் அந்தத் தோற்றம் புலப்பட்டதோ என்னமோ தெரியவில்லை. ஆனால் அவள் இராவணன் சிலையை நெருங்கித்தான் சென்றாள். நல்ல வேளையாகப் பக்கத்தில் கிடந்த சுத்தியின் மீது அவள் கவனம் செல்லவில்லை. இராவணன் தலைகள் கைகளுக்கும் அவை தாங்கிக் கொண்டிருந்த கைலாசகிரிக்கும் நடுவிலிருந்த இருளடர்ந்த பகுதியில் தீபத்தைத் தூக்கிப்பிடித்துக் காட்டினாள்.

அங்கே ஒரு துவாரம் இருந்தது தெரிந்தது. பூங்குழலி முன்னமேயே ஊகித்தது சரி தான். அங்கே ஒரு சுரங்கப் பாதையின் வெளித் துவாரம் இருக்கிறது. யாரும் சந்தேகிக்கமுடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சுரங்கப்பாதையின் துவாரத்தை மூடி விடுவதற்கே முன்னிரவில் தன் அத்தை பிரயத்தனப்பட்டாள். அதை அறிந்து கொள்ளாமல் மற்றவர்கள் தடுத்து விட்டார்கள்.

இவ்விதம் பூங்குழலி எண்ணிக் கொண்டிருக்கும் போதே ஊமைராணி தன் மருமகளுக்குத் தன்னைப் பின் பற்றிவரும்படி சமிக்ஞை செய்து விட்டுக் கையில் விளக்குடனே அந்தத் துவாரத்தில் சிரமப்பட்டுப் புகுந்து அதில் இறங்கிச் செல்லத் தொடங்கினாள்.

சிறிது சிறிதாக அவள் உடம்பு மறைந்து வந்து தலையும் மறைந்து கையில் பிடித்திருந்த விளக்கும் மறைந்தது. கொஞ்சம் வெளிச்சம் மட்டும் தெரிந்தது. பிறகு பூங்குழலியும் உடம்பை நெளித்து வளைத்துத் தலையில் மோதிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக அந்தச் சுரங்கத் துவாரத்துக்குள் இறங்கினாள். சில கணங்களுக்கெல்லாம் அவளும் மறைந்தாள். பின்னர், விளக்கின் ஒளியும் மறைந்தது சிற்ப மண்டபத்தில் அந்தகாரம் குடிகொண்டது.

காலையில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் எழுந்து பார்த்தபோது ஊமை ராணியையும் பூங்குழலியையும் அவர்கள் படுத்திருந்த இடத்தில் காணாமல் திடுக்கிட்டார்கள்.

அரண்மனை முழுவதும், தோட்டத்திலும், சிற்ப மண்டபத்திலும் தேடிப் பார்த்தும் அவர்கள் அகப்படவில்லை. அவர்கள் எப்படி மாயமாய் மறைந்தார்கள் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியிடம் கூறிய போது முதலில் அவர் சிறிது கவலைப்பட்டார். பின்னர், "அந்தப் பைத்தியங்கள் போய்த் தொலைந்ததே நல்லது! எப்படி தொலைந்தால் என்ன?" என்றார். எனினும் அவர் உள்ளத்தினுள்ளே இனந்தெரியாத கவலையும் பயமும் குடிகொண்டன.

**37 ஆம் அத்தியாயம்**
**கடம்பூரில் கலக்கம்**

ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்கு வந்ததிலிருந்து அம்மாளிகையில் நிரந்தரமாக வசித்தவர்களும் விருந்தினராக வந்தவர்களும் முள்ளின் மேல் நிற்பவர்கள் போலவும் நெருப்பின் மேல் நடப்பவர்கள் போலவும் காலங்கழிக்க வேண்டியிருந்தது.

தொடரும்...

## நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட

# உணவகங்கள், திருமண மண்டபங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்

## தவிசாளர் மயூரன் அறிவிப்பு



**(யாழ்ப்பாணம்) ...............................**

**நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட ஆளுகைப் பகுதியில் இன்னமும் பதிவு செய்யப்படாத உணவகங்கள், விடுதிகள், விருந்தகங்கள் மற்றும் திருமண மண்டபங்களை நடாத்துபவர்கள் எதிர்வரும் 31.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும் என பிரதேச சபை தவிசாளர் மயூரன் அறிவித்துள்ளார்.**

உணவகங்கள், விருந்தகங்கள், விடுதிகள் மற்றும் திருமண மண்டபங்களின் உரிமையாளர்களுக்கும் நல்லூர் பிரதேச சபையினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நல்லூர் பிரதேச் சபையின் எல்லைக்குள் எதிர்வரும் 1.1.2026 ஆம் திகதி முதல் லஞ்சீற் முற்றாக தடை செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் உணவகங்கள், விருந்தகங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் என்பன உணவுப் பரிமாற்றத்தின் போது லஞ்சீற் பயன்படுத்த முடியாது.

அத்துடன் திருமண மண்டபங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு வருகை தருவோர் தங்களுடைய வாகனங்களை பொதுபோக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் நிறுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மண்டப உரிமையாளர்கள் ஏற்படுத்திக் கொடுப்பதோடு அதனை கண்காணிக்கவும் வேண்டும்.

உணவுகளை தயாரித்தல், கையாளுதல் ஆகியவற்றில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

உணவகங்கள், விடுதிகள், விருந்தகங்கள், திருமண மண்டபங்கள் அனைத்தும் கட்டணகழிவகற்றல் முறைமையின் கீழ் தங்களை உடன் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு தவறும் பட்டசத்தில் அவர்களுக்கான வியாபார உரிமங்கள் ரத்துச்செய்யப்படும்.

மேலும் விடுதிகளை நடாத்துகின்ற விடுதி உரிமையாளர்கள் தங்களுடைய விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கு கழிவகற்றல் தொடர்பில் அறிவுத்தல்கள் வழங்க வேண்டியதுடன் அவர்கள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை இடுவதற்கு வசதியாக தங்களுடைய விடுதிகளில் கழிவுத் தொட்டிகள் வைக்கப்பட வேண்டும்.

குறித்த விடயங்கள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்றனவா என்பதனை சுகாதார பரிசோதகர்கள், இறைவரி பரிசோதகர்கள் நேரில் கண்காணித்து அறிக்கையிடுவர்.

குறித்த அறிவித்தல்களை மீறிச் செயற்படும் உணவகங்கள், விடுதிகள், விருந்தகங்கள் மற்றும் திருமண மண்டபங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்படுவதுடன் உரிய சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.(நி-8-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது ஒரு கல்விச்சாலை, அங்கு ஒவ்வொரு சூழ்நிலையும் நமக்கு நல்லதொரு பாடத்தையே கற்பிக்கிறது.
– பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அனைத்து எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்

நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை அரசியலாக்க நினைப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

அதிலும் எதிர்க்கட்சிகள் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இயற்கை அனர்த்தத்தில் இருந்து பொது மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் தவறிவிட்டதென்ற குற்றச்சாட்டை முன்வைத்து எதிர்க்கட்சிகள் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனவாம்.

உண்மையில் டித்வா புயல் காரணமாக மட்டுமே இந்த நாட்டில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டதெனக் கூற முடியாது.

இதற்கு முன்னரும் இயற்கை அனர்த்தங்கள் இலங்கையைப் பாதித்துள்ளன.

அதிலும் குறிப்பாக, மலையகத்தில் மண்சரிவால் ஏற்படும் துயரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இருந்தும் கடந்த கால ஆட்சியாளர்கள் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

உண்மையில் கடந்த கால ஆட்சியாளர்கள் மலையக மக்கள் மீது கருசனை கொண்டிருந்தால், இத்துணை இயற்கைப் பேரிடர் அவர்களைத் தாக்கியிருக்கமாட்டாது.

ஆக, டித்வா புயலால் ஏற்பட்ட பேரனர்த்தத்துக்குக் கடந்த கால ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்குகளே காரணம் எனக் கூறினால் அது தவறன்று.

உண்மை. இந்த நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் கணிசமான வகிபங்கை ஆற்றுகின்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் தொடர்பில் கருசனை கொண்ட ஒரேயொரு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், கடந்த கால ஆட்சியாளர்கள் மலையகத் தமிழ் மக்களை வஞ்சித்தனர். அவர்களின் உழைப்பை உறிஞ்சிய தோட்டக் கம்பனிகளின் நலன் பற்றிச் சிந்தித்த இலங்கை ஆட்சியாளர்கள், மலையகத் தமிழ் மக்களின் நலன் பற்றி இம்மியும் சிந்திக்கவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்து 77 ஆண்டுகள் கடந்த போதிலும் இப்போதுதான் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மலையகத் தமிழ் மக்களின் இல் இடங்கள், அவர்களின் வேதனங்கள் தொடர்பில் அதீத கருசனை எடுத்துள்ளார்.

ஆக, இயற்கை அனர்த்தம் தொடர்பில் இந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், இந்த நாடு தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு நிறைந்த பொறுப்பும் பணியும் உண்டு.

எனினும் ஆளுந்தரப்பை எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சிகளின் கடமை என்பதுபோல நிலைமை ஆகிவிட்டது.

உண்மையைக் கூறப்போனால், அனர்த்தம் ஏற்பட்ட வேளையில் நாட்டை மீட்டெடுக்க அரசாங்கத்துக்கு உதவுகின்ற பாரிய தார்மீகக் கடமையை எதிர்க்கட்சிகள் செய்திருக்க வேண்டும்.

எனினும் அவை இயற்கை அனர்த்தத்தை தமது அரசியலுக்கான அடிக்கட்டுப் பசளையாக ஆக்க நினைத்து செயற்படுவதுதான் வேதனைக்குரியது.

## டித்வா பேரிடரால் நிர்க்கதியான சிறுவர்களை குறிவைத்து மோசடி

### மோசடியாளர்களுக்கு பொலிஸார் வலைவீச்சு

நாட்டில் டித்வா பேரிடரை தொடர்ந்து ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பெற்றோரை இழந்து பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டி மேற்கொள்ளப்படும் மோசடி சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வூட்லர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் வழியாக தொலைபேசி இலக்கங்களை பதிவிட்டு சிறுவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டி மோசடிகள் இடம்பெறுவதாகவும் இவ்வாறான மோசடியுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, நாட்டில் டித்வா பேரிடரை தொடர்ந்து ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் காரணமாக 73 சிறுவர்கள் தாய், தந்தை அல்லது பெற்றோர் இருவரையும் இழந்துள்ளதாக மளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் பதுளை, கண்டி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் எனவும் பதுளையில் இவ்வாறான 21 சிறுவர்கள் பற்றிய தகவல் கிடைத்துள்ளதாகவும் கண்டி மாவட்டத்தில் 20 சிறுவர்கள் தாய், தந்தை அல்லது பெற்றோரை இழந்துள்ளதாகவும் பதுளை மாவட்டத்தில் மட்டும் அனர்த்தங்களால் 35 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக அமைச்சு அறிக்கையிட்டுள்ளது. (ம-7)

### யாழ். போதனாவினுள் அடாத்தாக நுழைந்து

## வைத்தியசாலையின் சொத்துக்கு தீங்கிளைத்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் நபரொருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கில் வைத்தியசாலைக்கு பிரஸ்தாப நபர் 55 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக செலுத்த வேண்டும் என மன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு கடந்த 2024ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி காயமடைந்த நபர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றியவாறு வைத்தியசாலைக்குள் உள்ள அவசர சிகிச்சை பிரிவு வரையில் அத்துமீறி நுழைந்த குறித்த நபர் அங்கு கடமையில் இருந்த உத்தியோகஸ்தர்களுடன் தர்க்கம் புரிந்து , மேசையில் இருந்த பிரிண்டர் ஒன்றினை உடைத்து சேதமாக்கி இருந்தார்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதலாளியை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று, தொடர்ந்து இடம்பெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் குறித்த வழக்கில் அவரை குற்றவாளியாக கண்ட மன்று வைத்தியசாலை உபகரணங்களுக்கு சேதமேற்படுத்தியமைக்காக வைத்தியசாலைக்கு 55 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. (ம-7,33)

### டித்வா புயலால் பாதிக்கப்பட்ட

## பண்ணையாளர்களுக்கு கால்நடைத் தீவனம்

நாட்டில் டித்வா புயல் காரணமாக விவசாயம், கால்நடை வளர்ப்புத் துறைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாய அமைச்சின் நிதியுதவியில் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாத ரத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு இரு வாரங்களுக்குத் தேவையான கால்நடைத் தீவனம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

அதன் ஓர் அங்கமாக கிளிநொச்சி கண்டாவளை கால்நடை வைத்திய அலுவலகத்திற்குற்பட்ட 160 உள்ளக மற்றும் அரை உள்ளக கால்நடை வளர்பில் ஈடுபடும் பண்ணையாளர்களுக்கு ஒரு பண்ணையாளருக்கு 50 கிலோக்கிராம் என்ற ரீதியில் கால்நடைகளுக்கான தீவனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.(ம-7,316)

## கீரிச் சம்பாவை பாஸ்மதி என விற்றவருக்கு தண்டம்

*(மாத்தளை)*

கீரிச் சம்பா அரிசியை "லங்கா பாஸ்மதி" என்று போலியான பெயரில் பற்றுச்சீட்டுகளை வெளியிட்டு அதிக விலைக்கு விற்ற மாத்தளை நாலந்த பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையால் நாவுல நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று இடம்பெற்ற நிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று அவருக்கு 110 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

நுகர்வோரை ஏமாற்றி போலியான பெயரில் பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொன்னாலை வரதராஜருக்கு 22 ஆம் திகதி கொடியேற்றம்

*(சுழிபுரம்)*

வரலாற்றுச் சிறப்புமிகு பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ( 22) நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் வெகு சிறப்பாக ஆரம்பமாகவுள்ளது.

மகோற்சவத்தின் ஒன்பதாம் நாளாகிய 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு சுவர்க்க வாயில் (பரமபத வாசல்) தரிசனமும் காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையை தொடர்ந்து 10.25 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை திருவடிநிலையில்காலை 8.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இரவு 8.00 மணிக்கு கொடியிறக்கமும் பக்திபூர்வமாக இடம் பெறவுள்ளது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வா அனர்த்தத்தால்

# வீதி அபிவிருத்தி சபைக்கு ரூ.75 பில்லியன் நட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமையினால் வீதிகள் மற்றும் பாலங்களுக்கு ஏற்பட்ட சேதம் காரணமாக தற்போது அண்ணளவாக மதிப்பிடப்பட்டதன் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுமார் 75 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களை முழுமையாகச் சீரமைக்கும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய புனரமைப்புப் பணிகளுடன் சேர்த்து அதற்காக சுமார் 190 பில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அனர்த்தத்தின் தன்மையை ஆய்வு செய்வதற்கும் அதனால் ஏற்படும் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் (11) பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்காரின் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. (ம-7)

## ஐஸ் போதைப்பொருளுடன் பொம்மைவெளியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் - பொம்மைவெளியில் 30 வயதுடைய இளைஞர் ஒருவர் 210 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ். போதைத் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## இலங்கைக்கு ஜப்பான் உதவி

(கொழும்பு)

இலங்கையில் நிலவிய சூறாவளி மற்றும் சீரற்ற கால நிலையால் ஏற்பட்ட கடுமையான பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, ஜப்பானிய அரசாங்கம் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர நிதியுதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த நிதியுதவியானது சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் ஊடாக இலங்கைக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-7)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## சந்தைகள் மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றிற்கு 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் 2026.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கு வதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- 2025.12.17 - 2025.12.26 முற்பகல் 10.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | :- 2025.12.26 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விதிறக்கும் திகதி | :- 2025.12.26 பி.ப 2.00 மணி |
| கேள்வி பத்திரம் திறக்கும் இடம் | :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட இரு பிரதிகளையும் **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு **26.12.2025** ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்த வுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டை**யையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. **ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீள ளிக்கப்படமாட்டாது.**
4. **கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபை தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.**
5. **தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2025 டிசம்பர் 31 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.**
6. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
7. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும். பொதுசுகாதார பரிசோதகரது அறிவுறுத்தலை கடைப்பிடித்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
8. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தையில் விற்பனை செய்யும் 5' நீளம் கொண்ட முகப்புக்கு ரூபா 125.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 150.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 20.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது. பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை தரகுக்கட்டண நடைமுறை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
9. பொதுமலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 20.00 ற்கு மேல் வரி அறவிடமுடியாது.
10. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிட முடியும்.
11. பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைக்காரர்கள் மாதாந்தம் நிலையான மின்சாரக்கட்டணமாக கீழ்வரும் விபரப்படி மாதாந்தக்குத்தகையுடன் செலுத்துதல் வேண்டும். சங்கானை மீன் சந்தை- 3,000.00, சத்தியக்காட்டுச்சந்தை கருவாட்டுக்கடை 750.00
12. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
13. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறிவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
14. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
15. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### சந்தைகள் மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான அட்டவணை - 2026

| இல | சந்தைகள் (வாகன்ப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானை மீன் சந்தை | | 3,900,000.00 | 78,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 90,350.00 | 1,807.00 | 1,000.00 |
| 03 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 01 | | 22,563.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 02 | | 22,563.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | சங்கானை பஸ்தரிப்பிட பொது மலசலகூடம் | | 22,563.00 | 1,000.00 | 1,000.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1,300.00 | 63,750.00 | 1,275.00 | 1,000.00 |
| 02 | பொன்னாலை வாராந்தச் சந்தை | | 47,205.00 | 1,000.00 | 1,000.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | | 480,510.00 | 9,610.20 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | | 80,000.00 | 1,600.00 | 1,000.00 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(C-4591) **17.12.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றம்...

நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார். (ம-7)

## மூச்சுவிட...

மாவிட்டபுரம் தெற்கு கொக்கல் வீதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த தயாளன் ருத்திரா (வயது-22) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

குறித்த யுவதி கடந்த 2023ஆம் ஆண்டிலிருந்து காசநோய்க்கு சிகிச்சைப் பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) மூச்சுவிட சிரமப்பட்டு மயங்கி நிலையில்வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## கிளிநொச்சி...

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட பிரான்ஸ் போலி கடவுச்சீட்டை வைத்துக்கொண்டு ஓமானின் மஸ்கட் நகர் ஊடாக ஜேர்மனி நோக்கிப் பயணிக்க முயன்ற இளைஞனே குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் எல்லை கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமான், செல்வதற்காக நேற்றுச் செவ்வாய்க்கிழமை (16) அதிகாலை 05.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற குறித்த நபர் அனைத்து விமான அனுமதி நடைமுறைகளையும் முடித்துவிட்டு குடிவரவு கருமபீடத்தில் தனது கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது ஏற்பட்ட சந்தேகத்தில் இளைஞனைத் தலைமை குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தபோது, அவர் வைத்திருந்த அனைத்து ஆவணங்களும் எல்லை கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப சோதனைகளின்போது, அவரின் கடவுச்சீட்டு போலியானது எனவும் அதில் பயன்படுத்தப்பட்ட குறிப்புகள் மற்றும் முத்திரைகளும் போலியானவை என்றும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, ஒரு தரகருக்கு 30 இலட்சம் ரூபாய் பணம் வழங்கி குறித்த கடவுச்சீட்டைப் பெற்றதாகத் தெரிவித்துள்ளார். (ம-7)

## மாடியிலிருந்து...

நீர்வேலியைச் சேர்ந்த மாணிக்கம் தட்சணாமூர்த்தி (வயது-62) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை (15) நண்பகல் மேசன் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை மேல் மாடியிலிருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (16) நண்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## வட மாகாண...

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சேவையின் தேவை கருதிய இடமாற்றம் 2026 முறையற்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த அனைத்து ஆசிரியர்களின் இடமாற்றங்களையும் மீறப் பெறுவதாக கல்வித் திணைக்களம் சார்பில் முன்[illegible]

டத்தரணி மன்றுக்கு தெரியப்படுத்தியதையடுத்து குறித்த வழக்கு முடிவுறுத்தப்பட்டது. (ம-7,33)

## நிவாரணப்...

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நிவாரணப் பொதிகளுடன் மற்றுமொரு இந்தியக் கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்தியாவால் "ஒப்பரேஷன் சாகர் பந்து" என பெயரிடப்பட்ட திட்டத்தின் கீழ், சௌரியா எனும் கப்பல் நேற்று முன்தினம் மாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. 54 தொன்களைவிட அதிகமான பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உப்பு, கோதுமை மா, மிளகாய், குடிநீர் போத்தல்கள், சீனி, சோயா மீட் உள்ளிட்ட பல பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் அரசாங்கத்திடம் குறித்த நிவாரண பொருட்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சம...

களம் வழங்கிய கட்டளையை வலுவிழக்கச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விகாரைக்கு உரித்தானது எனக் கூறப்படும் இந்த பகுதி சட்ட விரோதமானது எனத் தெரிவித்து, அதனை அகற்றுமாறு கடலோர பாதுகாப்புத் திணைக்களம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் விகாரையின் விகாராதிபதி இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அதற்கமைய, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான தம்மிக கனேபொல மற்றும் ஆதித்ய பட்டபெந்திகே ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலிக்கப்பட்டது.

அதன்போது மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுசந்த பாலபட்ட பெந்திகே இந்த வழக்கை சமரசமாகத் தீர்த்துக் கொள்ள வாய்ப் [illegible] மன்றத்துக்குத் தெரிவித்தார்.

விகாரையின் ஒரு பகுதியை அகற்றுமாறு விடுக்கப்பட்ட கட்டளையைத் திரும்பப் பெற பிரதிவாதிகள் இணங்கியுள்ளதாகவும், அதற்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டு செயற்பட மனுதாரர் தரப்பு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் மனோஹர ஜயசிங்க இந்த இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தினார்.

இரு தரப்பினரின் கருத்துக்களையும் ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், இந்தச் சமரச நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக வழக்கை பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு உத்தரவிட்டது. அன்றைய தினம் சமரசத் தீர்வு எட்டப்பட்ட விதம் குறித்து நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு இரு தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 6045
T 9 3 1 4 5 3

அத சம்பத
T 1 4 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 620
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 161
கும்பம் 09 16 32

தன நிதானய
திகதி - 2025.12.16
சீட்டிழுப்பு இலக்கம் - 2075
W 04 15 64 67 W

மெகா பவர்
திகதி 16/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2393
V 05 05 32 62 79

ஜய
திகதி 2025.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 0313
P 4 6 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4287
சீட்டிழுப்பு திகதி 16.12.2025
D 14 33 37 46
D
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 1354
மகரம் 02 35 57 62 மகரம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.12.2025 வெற்றி வாரம் 0753
G 4 5 5 1 7 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,624,132.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3019
சீட்டிழுப்பு திகதி 2025.12.16 தினம் செவ்வாய்க்கிழமை
07 37 50 63 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,902,608.80
DLB

சனிதா
திகதி 16.12.2025 வெற்றி வாரம் 5180
15 17 38 50 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,584,422.80
DLB

சசிரி
வெற்றி வாரம் 849
சீட்டிழுப்பு திகதி 16.12.2025 செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 39 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4731
சீட்டிழுப்பு திகதி 16.12.2025 தினம் செவ்வாய்க்கிழமை
02 19 47 48 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,450,614.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 28 41 47 50 57
2195
16.12.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.613,428,077.20
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2845
சீட்டிழுப்பு திகதி: 2025.12.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,813,810.40
05 14 20 62 N
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயறிங் & பிளமிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டிட நிர்மாண நிறுவனத்திற்கு முழுமையான வயறிங்வேலை & பிளம்பிங் வேலை தெரிந்தவர்கள் இருவர் அவசரமாக தேவை

**5 வருடத்திற்கு குறையாத அனுபவம் கட்டாயமானது ஆகும்**

**சம்பளம் மாதம் 100,000 + OT**

(C-4594)

Jaffna Architect & Engineers
**Phone: 077 213 7266**



## தேவை

- மேற்பார்வையாளர்கள் (ஆண் / பெண்) (A/L வர்த்தகப்பிரிவு ) பட்டதாரி
- மில் வேலை தெரிந்தவர்கள்
- உதவியாளர்கள் (யாழ். மாவட்டம்)

(1807)

**076 440 0816**



# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378,**
**076 097 3127**



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விசேட சலுகை,
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு




CALL - 070 375 0001 / 077 755 4528
321, K.K.S Road, Jaffna (6200)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4592)

**076 825 7716 (ஆகாஸ்)**



## Voyzant இந்தியா கோவில்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர் |
| திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி |
| திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர் |

**உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்**

**189,000/= (ஒரு நபருக்கு)** (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து — தங்குமிடம்

10 நாட்கள் | மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd | புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

**077 284 9535, 021 222 6866** (நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-4492)



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளானில் 06 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- செம்மண் காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- பலாலி வீதி 150m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 250m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள காணி

விற்பனைக்குண்டு

**074 029 2338, 076 990 3039** (6196)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 - 02 - 1939 | விண்ணில் 21 - 12 - 2022

மண்ணில் 19 - 02 - 1945 | விண்ணில் 24 - 01 - 2023

அமரர் **கணபதிப்பிள்ளை துரைரத்தினம்**

அமரர் **துரைரத்தினம் பாக்கியம்**

திதி: அபரபக்க திரயோதசி | திதி: பூர்வபக்க திருதியை

இணைந்தே இருந்து இமைபோல் எம்மை
இனிதே காத்திட்ட தந்தையும் தாயும்
இறையடி சேர்ந்திட்ட இத்திதி தனிலே
இறைவனிடம் வேண்டுகின்றோம் அவர் தம் ஆத்மசாந்திக்காய்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
077 766 6654 (C-4586)

தங்களின் ஆசியை வேண்டி நிற்கும் பிள்ளைகள்

உ
சிவமயம்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.11.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் திருமதி. சறோஜினிதேவி ஸ்ரீபாலச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 15.12.2025 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 17.12.2025 இன்று புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.** (6178)

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
0775839768

# 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி அறிதலும்



கடந்த 18.11.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## கலாபூஷணம் பரஞ்சோதி பரராஜசிங்கம் (பப்பா)

அவர்களின் இறுதிக்கிரியைகளில் பெருந்திரளாகக் கலந்து பல்வேறு வகைகளிலும் அஞ்சலி செலுத்திய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரது 31ம் நாள் ஆத்மசாந்திப்பிரார்த்தனை நிகழ்வு நாளையதினம் (18.12.2025) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் புலோலி தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும் தனித்தனியாக அழைப்பிதழை வழங்க முடியாத நிலையில் நாங்கள் உள்ளோம்.

எனவே எம்மை மன்னித்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (C-4585)

"கலைக்கோயில்" சின்னத்தாய்,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.